## மெட்ரோ ரெயில் சேவை

# தேனாம்பேட்டை— வண்ணாரப்பேட்டை அடுத்த மாதம் தொடக்கம்!

## 90 சதவீத பணிகள் முடிந்தன!!

சென்னை, நவ.1—

சென்னையில் தேனாம்பேட்டையில் இருந்து வண்ணாரப்பேட்டைக்குஅடுத்த மாதம் இறுதியில் மெட்ரோ ரெயில் ஓடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான 90 சதவீத பணிகள் முடிந்துவிட்டன.

சென்னையில் தற்போது விமான நிலையத்திலிருந்து சென்ட்ரல் வரை ஒரு பாதையிலும் தேனாம்பேட்டை டி.எம்.எஸ்.வரைஒருபாதையிலும் மெட்ரோ ரெயில் ஓடிக் கொண்டிருக்கிறது. தேனாம்பேட்டையிலிருந்து ஆயிரம்விளக்கு எழும்பூர் வழியாக வண்ணாரப்பேட்டை வரை சுரங்கப்பாதையில்மெட்ரோ ரெயில் பணிகள்நடந்து வருகின்றன. இந்த பணிகள் தற்போது 90 சதவீதம் முடிந்துவிட்டன.

எனவே, இந்த மாதம் சோதனை ஓட்டம் நடத்தி முடித்ததும், அடுத்த மாதம் இறுதியில் வழக்கமான ரெயில் போக்குவரத்தை தொடங்க முடிவு செய்யப்பட்டுள்ளதுஎனஅதிகாரிகள் தெரிவித்தனர்.

மெட்ரோ ரெயில் சேவைக்கான மென்பொருள்வருவதில்ஏற்பட்டதாமதத்தினாலும், அண்ணா சாலை ரெயில்நிலைய பணிகள் சில இடங்களில் முடியாததாலும்இந்தபாதையில் போக்குவரத்து தொடங்கதாமதமாகிவருகிறது என்று கூறப்பட்டது. ஆனால்இப்போதுமுழுவீச்சில் போக்குவரத்து தொடங்க ஏற்பாடு நடந்து வருகிறது. இருந்த போதிலும் மெட்ரோ ரெயிலுக்கு எதிர்பார்த்த அளவு பயணிகள் வரவில்லை.

அதிக கட்டணம் மாதந்திர பாஸ் திட்டம் இல்லை போன்ற பல்வேறு காரணங்களால்மெட்ரோரெயிலுக்கு பயணிகள்ஆதரவுஇல்லை. மேலும் விமான நிலையத்திற்கு பதில்தாம்பரத்திலிருந்து மெட்ரோ ரெயில் சேவை தொடங்கப்பட்டிருக்க வேண்டும். மேலும்அண்ணாசாலையில் 2 ஆண்டு தாமதம் போன்ற காரணங்களும் மிக குறைவானகட்டணத்துடன்ஓடும் மின்சாரரெயில்சேவை ஆகியவற்றால்மெட்ரோரெயில் சென்னை பயணிகளை கவரவில்லை. மெட்ரோரெயில் என்றாலேஉயர்நடுத்தரவர்க்கத்தினர் பயன்படுத்தும் போக்குவரத்து என்ற எண்ணம் சாதாரண மக்களிடையே உள்ளது.



இந்த நிலையை மாற்ற மெட்ரோ ரெயில் நிர்வாகம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறது. தீபாவளியையொட்டிமெட்ரோரெயிலில் அதற்கேற்ப கோலம் மற்றும்படங்கள்அமைக்கப்பட்டு களைகட்டியுள்ளது. அடிக்கடி இலவசப்பயணம், இசை நிகழ்ச்சிகள் என பல்வேறு அம்சங்களை மெட்ரோ ரெயில் நிர்வாகம் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.